பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 10 2024 **SATURDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பல்வேறு பகுதிகளில் விரைவில் ஐந்து செமி கண்டெக்டர் உற்பத்தி ஆலைகள் நிறுவப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. படைப்பாற்றல் துறையில் ஆக்கப்பூர்வமான உள்ளடக்கத்தை உருவாக்குவதில் இந்தியா உலகளாவிய மையமாக மாறுவதற்கான நேரம் கனிந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது

3. மருத்துவம், விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. பெண் கல்விக்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

5. முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகள் சென்னையில் நேற்று தொடங்கியது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் விரைவில் ஐந்து செமி கண்டெக்டர் உற்பத்தி ஆலைகள் நிறுவப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பொருளாதார உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், மொபைல் போன்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலையிலிருந்து உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நிலைக்கு இந்தியா மாறுவதற்கு இந்த ஆலைகள் உதவும் என்று கூறினார்.

நாட்டில் பல்வேறு துறைகளில் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரமாக உள்ள இந்தியா, மிக வேகமாக வளர்ந்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நிதித்துறையில் தொழில்நுட்பங்களை புகுத்தியதில் உலகில் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<<<>>>>

படைப்பாற்றல் துறையில் ஆக்கப்பூர்வமான உள்ளடக்கத்தை உருவாக்குவதில் இந்தியா உலகளாவிய மையமாக மாறுவதற்கான நேரம் கணிந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு **Sanjay Jaju** தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் அனிமேஷன் மற்றும் பொழுதுபோக்கு துறையின் பிரதிநிதிகள் இடையே நேற்று உரையாற்றிய அவர், உலகளாவிய ஊடக பொழுதுபோக்கு துறையில் இந்தியாவின் பங்கு வெறும் இரண்டு சதவீதம் மட்டுமே என்று கூறினார்.

தற்போதைய 25 பில்லியன் டாலர் சந்தையிலிருந்து 2029-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் சந்தையாக வளர்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இத்தொழில் துறையினருக்கு தேவையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவை உலக அளவில் உள்ளடக்க மையமாகவும், உள்ளடக்கங்களின் ஏற்றுமதியாளராகவும் மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு அத்துறையினரை திரு **Sanjay Jaju** கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

மருத்துவம், விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விளையாட்டுப் போட்டிகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்படும் மாநிலம் தமிழகம் என்று கூறினார்.

இந்தியாவில் விளையாட்டுத்துறையின் தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான செஸ் ஒலிம்பியாட், உலகக்கோப்பை ஸ்குவாஷ், ஆசிய கோப்பை ஹாக்கி உட்பட பல்வேறு போட்டிகளை தமிழகம் வெற்றிகரமாக நடத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் விளையாட்டு உபகரங்களை மாநில அரசு வழங்கியுள்ளதாகவும், கிராமப்புறத்திலிருந்து விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க மாநில அரசு தேவையான உதவிகளை செய்து வருவதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<<<>>>>

ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் மூன்று கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரோப் கார் வசதி, காட்சி முனையம் உள்ளிட்ட வசதிகள் செய்துதரப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஏற்காடு படகு இல்லத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - ராஜேந்திரன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>

பெண் கல்விக்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்துத்தரப்புமக்களும் கல்வி அறிவு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

உயர்கல்வித்துறையில் தமிழகம் அகில இந்திய அளவில் முன்னணியில் உள்ளதாகவும், பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழக கல்வித்துறை திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வி மட்டுமே வாழ்க்கையில் உயர்வினை கொண்டுவரும் என்பதால், பெண்கள் உயர்கல்வியை தவறவிடக்கூடாது என்றும் திரு கோவி. செழியன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு அளிக்கப்படும் கடனுதவியால் ஏராளமான பெண்கள் பயனடைந்து வருவதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் சமூக நலத்துறை சார்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் நேற்று உரையாற்றிய அவர், 35 ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரி மாவட்டத்தில்தான் முதல் முதலாக மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டதாக கூறினார்.

தற்போது, தமிழகத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாகவும், கடனுதவியால் ஏராளமான பெண்கள் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 84 ஆயிரத்து 91 மகளிர் பயனடைந்து வருவதாகவும், அவர்களுக்கு 340 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறினார்.

<<<<<<>>>>

விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினம் வரும் எட்டாம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, சென்னையில் விமானப்படையின் சாகச நிகழ்ச்சி நாளை நடைபெறவுள்ளதையொட்டி, கடற்கரை பகுதியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

திருவான்மியூரில் இருந்து பிராட்வே நோக்கி செல்லும் வாகனங்கள், மயிலாப்பூர் வழியாக திருப்பிவிடப்படும் என்று போக்குவரத்து காவல்துறை அறிவித்துள்ளது.

பிராட்வேயிலிருந்து, கடற்கரை நோக்கி வரும் வாகனங்கள், வாலாஜாபாத் சாலையில் திருப்பி விடப்படும் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிசீட்டு வைத்திருப்போர் வாகனங்கள் மட்டும் கடற்கரை சாலையில் அனுமதிக்கப்படும் என்றும், மற்ற வாகனங்கள் வாலாஜாபாத் சாலையில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான சாகச கண்காட்சியை காணவரும் பொதுமக்களின் வசதிக்காக கடற்கரைக்கு மாநகர போக்குவரத்துக்கழகம் 100 பேருந்துகளை இயக்க உள்ளது.

அரசினர் தோட்டம் மற்றும் **DMS** மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து, கடற்கரைக்கு பொதுமக்கள் செல்லும் வகையில் சிற்றுந்துகளும் இயக்கப்பட உள்ளன.

<<<<<<>>>>

வங்கக்கடலில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று, இடி - மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, ஈரோடு, சேலம், கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மத்திய கிழக்கில் பதற்றத்தை தணிக்க பிரான்ஸ் உள்ளிட்ட நேச நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டின் அதிபர் திரு ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

---------------

மும்பையில் முதலாவது சுரங்க ரயில்பாதை திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.

--------------

அர்ஜென்டினா வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி **'Diana Mondino** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

--------------

ஜம்மு காஷ்மீரில் குப்வாரா பகுதியில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

---------

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுமானப்பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் நேற்று ஆய்வு செய்தார்.

-----

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் வட மாநில தொழிலாளர்கள் இருவருக்கு எலி காய்ச்சல் உறுதிபடுத்தப்பட்டுள்ளதையடுத்து, மருத்துவமனையில் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

-----------------

தென்காசி மாவட்டம் வடகரை பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் முகாமிட்டுள்ள காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

-----------------

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் ஆதார் அட்டை திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கான சிறப்பு முகாம் இன்றும் நடைபெறவுள்ளது.

--------------

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பி டி ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களுக்கு பெரியாறு அணையிலிருந்து வினாடிக்கு 100 கனஅடிவீதம் 120 நாட்களுக்கு, நாளை மறுநாள் முதல் தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகள் சென்னையில் நேற்று தொடங்கியது.

ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் இப்போட்டிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இம்மாதம் 24-ஆம் தேதிவரை சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நான்கு நகரங்களில் 35 வகையான விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள 33 ஆயிரம் பேர் இந்த போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

-------------

துபாயில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான மகளிர் டுவென்டி —டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 58 ரன் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

<<<<<<>>>>